மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, அது என்ன ஸ்பெஷல் ஐட்டம் என்று ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். ஞானசேகரன் அவர்களே, சற்று முயற்சித்து கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் இணைத்து இப்படி விட்டு சுண்டிப் பாருங்கள். அதுதான் ஸ்பெஷல் ஐட்டம். (சிரிப்பு)

3. தகவல் கோரல்

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா 3 இலட்சம் அமெரிக்க டாலர் நன்கொடை வாங்கியதாக வந்த செய்தி

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அம்மையார் மீது சி.பி.ஐ. விசாரணை செய்யும் என்ற ஒரு செய்தியைப் பத்திரிகைகளில் எல்லாம் பார்த்தோம். அந்த சி.பி.ஐ. விசாரணை எது குறித்து செய்யப்படுகின்றது? அந்த விசாரணை குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு ஏதேனும் பரிந்துரை செய்திருக்கிறதா என்பன போன்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மீது சி.பி.ஐ. விசாரணை யாரால் முதலில் தொடங்கப்பட்டது என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். வருமான வரித் துறையிடமிருந்து இந்த அரசுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 3 லட்சம் அமெரிக்கன் டாலர் நன்கொடையாக வாங்கியிருக்கிறார், 3 லட்சம் டாலர் என்றால் ஏறத்தாழ ஒரு கோடிக்கு (குறுக்கீடு) ஒரு கோடியே 5 லட்சம் என்று கணக்கிடுகிறார்கள். அஃதன்னியில் இந்தியாவுக்குள்ளேயே 3 கோடி ரூபாய் நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். எனவே, இந்த பல கோடி ரூபாய் பற்றி விசாரணை நடத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வருமான வரித் துறை இந்த அரசுக்கு எழுதியது. அதுவும் நம்முடைய குற்றவியல் பிரிவு காவல் துறையைக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுதியது. உடனே தமிழக அரசு அந்தக் கடிதத்தை கிரைம் பிராஞ்ச், குற்றப்

1996 ஆகஸ்ட் 9] [கலைஞர் மு. கருணாநிதி]

புலனாய்வுத் துறைக்கு அனுப்பி விசாரிக்க தமிழக அரசு கோரியது. அவர்கள் அதைப் பரிசீலித்து விட்டு சொன்னார்கள், விளக்கம் தந்தார்கள், எங்களுக்கு எழுதினார்கள். என்ன எழுதினார்கள் என்றால், இந்தப் பிரச்சினையிலே அமெரிக்கன் டாலர் விவகாரம் இருக்கிறது, 3 லட்சம் டாலர் விவகாரம் இதிலே இருக்கின்ற காரணத்தாலும் இது வெளிநாட்டுத் தொடர்பு உடையதாக இருக்கின்ற காரணத்தாலும் இதிலே இங்கே உள்ள போலீசார் மட்டும் விசாரித்துப் பயன் இல்லை, எனவே மத்திய அரசு சம்பந்தப்பட்ட சென்ட்ரல் ஏஜென்சி மூலம் விசாரிப்பதுதான் தகுந்த முறையாக இருக்கும் என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்தார்கள். இந்தத் தகவலை நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்து நீங்கள் எங்களுக்கு இன்கம் டாக்ஸ் ஆபீஸ் மூலமாக தந்த தகவலின்படி விசாரிக்க எங்களுடைய புலனாய்வுத் துறையினால் இயலாது என்றும் இதற்கு சென்ட்ரல் ஏஜென்சிதான் தேவைப்படும் என்றும் சொல்கிறார்கள் என்ற தகவலை மத்திய அரசுக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். மத்திய அரசு உடனடியாக அதற்கு சி.பி.ஐ. விசாரணை இன்றைக்கு அமைத்திருக்கிறது. இதுதான் உண்மை நிலவரம்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, அவர் கட்டிய வீட்டில் காம்பவுண்டு சுவரில் 6 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவாகியிருக்கிறது, அதற்கு முறைப்படி நீங்கள் கணக்குக் காட்டவில்லை — disproportionate to your income — என்று சொல்லி அவருடைய வருமானத்திற்குக் கூடுதலாக அந்த 6 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லி அவர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார், ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக. ஆக ஒரு ரூபாய் மாதம் வருமானம் என்று வாங்கிக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாயை வருமானமாகக் காட்டி, வெளிநாட்டிலிருந்து வந்தது, உள்நாட்டிலிருந்து வந்தது, என்று சொல்பவர்கள்மீது இன்னும் நடவடிக்கை எடுக்காமல் மத்திய அரசும், மாநில அரசும் தூங்கிக்கொண்டு இருக்கிறதா என்று மக்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு எங்களால் பதில் சொல்ல முடியவில்லை. ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகளை எல்லாம் நீங்கள் துரிதப்படுத்தி, உரிய தண்டனையை சட்டப்படி நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மிக முக்கியமான மானியம் என்பதற்காக கேள்வி

[கலைஞர் மு. கருணாநிதி] [1996 ஆகஸ்ட் 9

நேரத்தைக்கூட ஒத்திவைத்துவிட்டு என்னையே முழுமையாக இந்த அவை இன்றைக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களுடைய இந்த ஆதங்கத்திற்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற நிகழ்வுகளில் சிலரைக் கைது செய்தும் சிறையில் அடைத்தும் விசாரணைகள் நடத்துவது உண்டு. சிலரைக் கைது செய்யாமலும் விசாரணை நடத்துவது உண்டு. இந்த இரண்டு முறையையும் இந்த அரசு பின்பற்றுவது தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். ஒருவரைக் கைது செய்யவில்லை என்பதற்காக அவர் குற்றவாளி அல்ல என்று பொருள் அல்ல. சில நேர்வுகளில் குற்றவாளிகளைக் கைது செய்தும் விசாரிப்பது உண்டு; கைது செய்யாமலேகூட நேரடியாக வழக்கு மன்றத்திற்குச் செல்வது உண்டு. கைது செய்யப்பட்டால் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு, பிறகு விசாரிக்கப்பட்டு, பிறகு தண்டனை பெற்று பிறகு சிறைக்குச் செல்வார்கள். கைது செய்யப்படாமல் இருந்தால் வழக்கு முடிந்து தண்டனை பெற்று சிறைக்குச் செல்வார்கள். இதுதான் வித்தியாசம்.

முற்பகல் 10-55

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொன்ன வார்த்தைகளை நான் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது தேவையில்லாத குற்றச்சாட்டு. இதை ஏற்றுக் கொள்ள முடியாது. (குறுக்கீடு) உறுப்பினர்கள் யாரும் பதில் சொல்லத் தேவையில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சொக்கர், இதிலே நீங்கள் பதில் சொல்லுவதற்கு அர்த்தமே இல்லை. நான் அதை அனுமதிக்கவே இல்லை.

திரு. ஆர். சொக்கர்: ஒரு வரி. மாண்புமிகு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் கேட்டதையே நான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்த பிறகு உங்கள் ஒரு வரி பதில் எப்படிச் சரியாக இருக்கும்? (குறுக்கீடு) அது வேண்டாம், உட்காருங்கள் நீங்கள். நான்தான் அந்தக் கேள்வியே கூடாது என்கிறேன், அப்புறம் உங்கள் பதிலை மாத்திரம் அனுமதித்து என்ன பிரயோஜனம்? அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.